**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 06-04-2023**

**திருச்சிராப்பள்ளி(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-04-06 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-04-07 | 2023-04-08 | 2023-04-09 | 2023-04-10 | 2023-04-11 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 37.0 | 37.0 | 38.0 | 38.0 | 38.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 27.0 | 28.0 | 28.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4.0 | 4.0 | 6.0 | 4.0 | 4.0 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 250 | 200 | 200 | 290 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 2 | 1 | 1 | 1 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

இந்த வாரத்தில் மழை எதிர்ப்பார்க்கப்படவில்லை. சராசரி ஈரப்பதம் (காலை & மாலை), அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே (80.0% & 30.0%), 38.0°C மற்றும் 27.0°C என எதிர்பார்க்கப்படுகிறது.. காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 4.4 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், அதிகபட்சமாக 8.0 கி.மீ வேகத்தில் வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

| |
|---|
| தமிழ்நாட்டில் மழை அளவானது இந்த வாரம் (05.04.2023 முதல் 11.04.2023 வரை) 0.95 மி.மீ. லிருந்து 2.23 மி.மீ. பொழிய வாய்ப்புள்ளது |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| விற்பனைக்கு: த.வே.ப.க. பயிர் பூஸ்டர்ஸ்: பயறு ஒண்டெர், கரும்பு பூஸ்டர், மக்காச்சோள மேக்ஸிம், நிலக்கடலை ரிச் மற்றும் பருத்தி பிளஸ். த.வே.ப.க. டானிக்: தென்னை டானிக். தொடர்புக்கு: 6381186765 |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கரும்பு | முன்பட்ட கரும்பு இரகங்களை 10 முதல் 11 மாதத்திற்குள்ளும் பின்பட்ட இரகங்களை 11 முதல் 12 மாதத்திற்குள்ளும் அறுவடை செய்ய வேண்டும். கரும்பினை அதன் உச்ச கட்ட முதிர்ச்சி காலத்தில் அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்யும்போது நடவுப் பயிராக இருந்தாலும் அல்லது மறுதாம்புப் பயிராக இருந்தாலும் தரையோடு தரையாக பூமி மட்டத்திற்கு அறுவடை செய்ய வேண்டும். |
| பருத்தி | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் காயழுகல் நோய் ஏற்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த கார்பென்டாசிம் @ 500 கிராம் (அ) மேங்கோசெப் @ 2000 கிராம் (அ) காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2500 கிராம்/ஹெக்டர் என்ற அளவில் காயழுகல் புழுவிற்கு தெளித்த பூச்சிக்கொல்லி மருந்துடன் கலந்து 45-வது நாளும் மற்றும் இரண்டு வாரத்திற்கு ஒரு முறையும் தெளிக்கவும். |
| மக்காச்சோளம் | மக்காச்சோள மேச்சிம் பூஸ்டரினை மக்காச்சோள பயிருக்கு ஏக்கருக்கு 3 கிலோ என 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆண் மஞ்சரி மற்றும் மணி உருவாகும் பருவத்தில் தெளிக்கவும். கூடுதலாக ஓட்டும் திரவம் சேர்த்து கொள்ளவும். பயன்கள்: மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும், விளைச்சல் 20 சதம் வரை கூடும் மற்றும் வறட்சியை தாங்கி வளரக்கூடும். |
| நிலக்கடலை | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக இலைப்புள்ளி நோயின் தாக்கம் நிலக்கடலையில் ஏற்படும். இதனை கட்டுப்படுத்த மேங்கோசெப் 1000 கிராம்/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| எள் ( கிங்கேல்லி / டில்) | செடியில் கீழிலிருந்து 25 சத இலைகள் உதிர்ந்துவிடும். காய்கள் மற்றும் தண்டுப்பாகங்கள் பழுப்பு நிறமாக மாறும். செடியின் அடியிலிருந்து மேலாக உள்ள 10வது காயில் உள்ள விதைகள் கறுப்பாக ((முதிர்வு) மாறியிருக்கும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மி.லி வேர் மூலம் கொடுக்க வேண்டும். தென்னை டானிக் (ரூ. 310 / லிட்டர்), விற்பனைக்காக வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணி-ல் உள்ளது. தொடர்புக்கு: 6381186765. |
| மரவள்ளிக்கிழங்கு | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக மரவள்ளியில் கிழங்கு அழுகல் பிரச்சனை ஏற்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த வயலில் நீர் தேங்காதவாறு மற்றும் போதுமா வடிகால் வசதி செய்யவும் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை 2.5 கிராம்/லிட்டர் என்ற அளவில் கலந்து ஊற்றவும். |
| வெண்டை/ லேடிஸின் விரல் | நிலவி வரும் வானிலையின் காரணத்தால் வெண்டையில் சாம்பல் நோயின் தாக்கம் ஏற்படக்கூடும். இதனை கட்டுப்படுத்த நோயின் அறிகுறி தெரிந்ததும் கார்பென்டாஸிம் மருந்தினை 1 கிராம்/லிட்டர் என்ற அளவில் மழை அல்லாத நாட்களில் தெளிக்கவும் மற்றும் தேவைப்பட்டால் அடுத்த 15 நாளில் தெளிக்கவும். |
| மாம்பழம் | மா பயிரில் மாங்கொட்டைத் துளைப்பான்-யை கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட பழங்களை சேகரித்து அகற்றி விட வேண்டும். பூக்கள் மலராத பருவக்காலத்தில் பூச்சி மருந்தை நேரிடையாக மரங்களின் அடியில் தெளிக்கவும். |
| தக்காளி | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தக்காளியில் முன்பருவ இலைக்கருகல் நோய் ஏற்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த ப்ரோபிகோனசோல் 25% EC 1 மி.லி/லிட்டர் என்ற அளவில் நடவு செய்த 30 வது மற்றும் 50 வது நாட்களில் தெளிக்கவும். |
| கத்திரிக்காய் | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக கத்திரியில் நாற்றழுகல் நோய் ஏற்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த நீர் தேக்கத்தினை தடுக்கவும் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை 2.5 கிராம்/லிட்டர் என்ற |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
| --- | --- |
| | அளவில் ஒரு சதுர மீட்டர் அளவுக்கு 4 லிட்டர் என்ற வீதம் ஊற்றவும். |
| வாழை | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக வாழையில் மஞ்சள் இலைப்புள்ளி நோய் ஏற்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த நோய்க்குட்பட்ட இலைகளை அகற்றி எரித்து விடவும் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை 2.5 கிராம்/லிட்டர் என்ற அளவில் நவம்பர் மாதம் முதல் மாத இடைவெளியில் தெளிக்கவும். |
| மிளகாய் | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக மிளகாயில் சாம்பல் நோய் ஏற்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த கார்பென்டாசிம் 1 கிராம்/லிட்டர் என்ற அளவில் மூன்று தெளிப்புகள் தெளிக்கவும் மற்றும் அறிகுறிகள் தெரிந்ததிலிருந்து 15 நாட்கள் ஒருமுறை தெளிக்கவும். |
| வெங்காயம் | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக வெங்காயத்தில் கோழி கால் வேர் அழுகல் நோய் ஏற்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த நடவு செய்த வயல்களில் ட்ரைக்கோடெர்மா விரிடி-யை 2.5 கிலோ/ஹெக்டர் என்ற அளவில் தொழு உரத்துடன் கலந்து போடவும். அல்லது நடவு செய்வதற்கு முன்பு விதைகளை திரம் அல்லது கேப்டன் கொண்டு 4 கிராம்/கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்து நடவு செய்யவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
| --- | --- |
| வெள்ளாடு | இனப்பெருக்கத்திற்கு தயார் நிலைக்கு இருக்கும் பெட்டை ஆடுகளுக்கு தரமான குட்டிகளை ஈனும் பொருட்டு இனப்பெருக்கத்திற்கு முன் புரதச்சத்தும் மாவுச் சத்தும், தாது உப்பும் கலவை கொடுக்க வேண்டும் மற்றும் வைட்டமின் நிறத்தை கலவை கொடுக்க வேண்டும். |
| பசு | தற்போதைய வானிலையில் கறவை மாடுகள் மற்றும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பு மருந்து செலுத்த வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக்கன் | கோழி காலரா; சுவாச கோலார்-திறந்த மூக்கு, இறகு சுருண்டு காணுதல், கொண்டை மற்றும் வாட்டல் ஆகியவை சயனோடிக் ஆக மாறும். மஞ்சள் நிற வயிற்றுப்போக்கு இருக்கலாம். நாள்பட்ட வடிவத்தில் வீங்கிய கொண்டை மற்றும் வாட்டில், மூட்டுகள் சூடாகவும் வலியுடனும் இருக்கும். என்ரோஃப்ளோக்சசின் மருந்து பயனுள்ளதாக இருக்கும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | நிலவும் அதிக பகல் வெப்பநிலையால் கால்நடைகளுக்கு போதுமான அளவு சுத்தமான தண்ணீர் கொடுக்க வேண்டும், தற்போது நிலவும் வானிலையில் கோழிகளில் ஏற்படும் வெப்ப அயற்சியை தடுக்க காலை மற்றும் மாலை வேளைகளில் தீவனம் கொடுக்க வேண்டும். |